# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, TIRUPATHUR.**

**CC. No.40/2024.**

1. Deposition of Witness for : PW4
2. Name : திரு.கே.கருணாகரன்
3. Father's Name :
4. Village :
5. Taluk :
6. Calling : காவல் சிறப்பு உதவியாளர்
7. Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 18.03.2025.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது குரிசிலாப்பட்டு காவல் நிலையத்தில் தனிப்பிரிவு சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.09.2023 ம் தேதி பகல் 12.30 மணிக்கு நான் வாணியம்பாடி கிராமிய காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்தபோது வாணியம்பாடி தாலுக்கா காமராஜபுரத்தை சேர்ந்த ராஜமாணிக்கத்தின் மகன் கண்ணன் என்பவர் நிலையம் சேர்ந்து தான் மேற்கண்ட முகவரியில் நிரந்தரமாகவும் தற்சமயம் வாணியம்பாடி மேட்டுப்பாளையம் கைலாசகிரி ரோட்டில் வீடு வாடகைக்கு எடுத்து குடும்பத்துடன் வசித்து வருவதாகவும் அவர்களுக்கு 4 ஆண் பிள்ளைகள் உள்ள நிலையில் அவரது மூத்த மகன் மோகன்ராஜ் வயது 17 என்பவர்

01.09.2023 ம் தேதி காலை 10.00 மணிக்கு வாணியம்பாடி மேட்டுப்பாளையம் ஜே.பி அகர்பர்த்தி கம்பெனிக்கு வேலைக்கு சென்றவர் வேலையின்போது காலை 11.15 மணிக்கு வாசனை திரவியங்கள் கலக்கி அகர்பர்த்தி இயந்திரத்தில் செலுத்தும்போது தவறுதலாக இயந்திரத்தின் உள்ளே விழுந்துள்ளார். இந்த சம்பவத்தில் மோகன்ராஜிக்கு தலை மற்றும் வயிற்று பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டு உடனடியாக வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்செல்லப்பட்டுள்ளார். தகவல் அறிந்து மருத்துவமனைக்கு சென்ற மோகன்ராஜின் தந்தை கண்ணன் மருத்துவரிடம் விசாரித்தபோது ஏற்கனவே மோகன்ராஜ் இறந்துவிட்டதாக கூறியுள்ளார். இது சம்மந்தமாக வாதி கண்ணன் நிலையம் சேர்ந்து மேற்படி பிரேதத்தின் மீது நடவடிக்கை எடுக்குமாறு கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று 01.09.2023 ம் தேதி பகல் 12.30 மணிக்கு வாணியம்பாடி கிராமிய காவல் நிலைய குற்ற எண்.384/2023 பிரிவு 174 Cr.P.C Death due to fall on Machine வழக்கு பதிவு செய்து பின்னர் பகல் 1.00 மணிக்கு சம்பவ இடம் சென்று பார்வையிட்டு பார்வை மகசர் தயார் செய்து சாட்சிகளிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. பின்னர் வாணியம்பாடி அரசு மருத்துவமனை சென்று பிரேத விசாரணை மேற்கொண்டு சாட்சிகளை விசாரணை செய்து பின்னர் வாணியம்பாடி அரசு மருத்துவரால் பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை வாதி கண்ணன் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இது சம்மந்தமாக தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் துணை இயக்குநர் அவர்கள் என்னிடம் விசாரித்து முதல் தகவல் அறிக்கை நகலை பெற்றார். என்னிடம்

காட்டப்படும் முதல் தகவல் அறிக்கையின் சான்றிட்ட நகல் தான் **<u>அ.த.சா.ஆ.13</u>** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-</u>

எழுத்துமூலமான புகாரை பெற்றேன். எழுத்துமூலமான புகாரை நான் எழுதவில்லை. புகார் கொடுத்தவரே புகார் கொண்டுவந்தார். புகாரை நான் எழுதவில்லை. புகார்தாரரிடம் எழுத்துமூலமான புகாரை பெற்று வழக்கு பதிவு செய்வதற்கு முன்பாக முதல் தோற்ற வழக்கு இருக்கிறதா என்று விசாரணை செய்யவில்லை. என்னிடம் கொடுக்கப்பட்டதாக சொல்லப்படும் புகாரை உரிய நீதிமன்றத்தில் நாளது தேதி வரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. புகார்தாரரை எனக்கு நேரடியாக தெரியாது. புகார்தாரருடன் யார்யார் வந்தார்கள் என்று என்னால் சொல்ல இயலாது. ஜெயபால் என்பவரும் புகார்தாரருடன் அன்றைய தினம் வந்திருந்தார் என்றால் இருக்கலாம். நான் சாட்சிகளை விசாரணை செய்ததற்காக எந்த அறிக்கையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. மேற்படி புகாரின் பேரில் இறுதி அறிக்கை நாளது தேதி வரை உரிய நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

P V SANDILYAN Digitally signed by P V SANDILYAN

Chief Judicial Magistrate,
Tirupathur.